சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

சென்னைச்சிவனடியார்திருக்கூட்டத்தின்
மாதாந்தபத்திரிகை.

1916-ம் ௵

இரண்டாம் மலர்.

இது
திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடாலயம்
ஸ்ரீ ல ஸ்ரீ
சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகளுக்குச்
சமர்ப்பிக்கப்பெற்றது.

பத்திரிகாசிரியர்
இருக்கம் - ஆதிமூலமுதலியார்
*(Retired Accountant, Military Accts. Department.)*
நெ. 43, பாளையப்பன்வீதி, சென்னை.

சென்னை
சைவவித்தியாநுபாலன அச்சியந்திரசாலை
1915
விலை ரூபா 1.
(தபால்செலவுட்பட.)

# அட்டவணை.


| உள்ளுறை. | பக்கம். |
|---|---|
| 1. அப்பூதியடிகணுயனுர்புராணம் | 17–33 |
| 2. அநுட்டானச்சந்தேக வினுவும் விடையும் .. | 82–98 |
| 3. கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் சரித்திரம் | 12 |
| 4. கல்வி .. .. .. | 129–169 |
| 5. காரைக்காலம்மையார்புராணம் .. .. .. | 139 |
| 6. கார்த்திகைவிளக்கீடு .. .. .. .. | 173 |
| 7. காலப்பிரமாணம் .. | 162 |
| 8. சபாக்கிரந்தம் .. .. .. .. .. | 40 |
| 9. சமயம் .. .. .. .. .. | 5–25 |
| 10. சிதம்பாதத்துவார்த்தம் .. .. | 181 |
| 11. சிவகீதை (பிண்டோற்பத்திகதனம்) .. .. .. | 152–180 |
| 12. சிவஞானபோதம் .. .. .. .. .. .. | 101–117–133–149 |
| 13. சிவஞானயோகிகள் திருநக்ஷத்திரம் .. .. .. | 83 |
| 14 சிவபாத்வநிரூபணம் .. .. .. .. .. | 99 |
| 15. சிவபுண்ணியம் .. .. .. .. .. .. | 28 |
| 16. சிவபெருமான்காலாதீதர் .. .. .. .. .. | 164 |
| 17. சிவாகசியம் (கலியுகதருமம்) .. .. .. .. | 65 |
| 18. சிவாகசியம் (பிரமருத்திரசிருஷ்டி) .. .. | 74 |
| 19. சிவலிங்கவழிபாடு .. .. .. .. .. | 30–50 |
| 20. சிவனடியார்பூசை .. .. .. .. .. | 77–88 |
| 21. சிவனடியார் திருக்கூட்டத்துக் சிறந்தவிண்ணப்பம் .. | 85 |
| 22. சுபசமாசாரங்கள் .. .. .. .. .. .. | 196 |
| 23. சைவம் .. .. .. .. .. .. | 1 |
| 24. சைவசுராச்சியம் .. .. .. .. .. | 157 |
| 25. சைவநூல்களும் வெளான்மவாதிகளும் .. .. | 165 |
| 26. சோமவாரவிரதம் .. .. .. .. .. | 159 |
| 27. தீவினையச்சம் .. .. .. .. .. | 53–69 |
| 28. தேவாலயதரிசனம் .. .. .. .. | 113 |
| 29. நாத்திகன்கர்வபங்கம் .. .. .. .. | 116 |
| 30. மகாஜனக்கூட்டம் .. .. .. .. | 39 |
| 31. முத்திசோபானம் .. .. .. .. | 186 |
| 32. வாகுணதேவர்சரித்திரம் .. .. .. .. | 108 |
| 33. விநாயகசதுர்த்திவிரதம் .. .. .. .. | 120 |
| 34. விவாகவிதி .. .. .. .. | 61 |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

மலர் 2.] || இராக்ஷச ௵ தை ௴ 1916 ௵ ஜனவரி ௴ || [இதழ் 1.

*" திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கு*
*மாதலால் வானோரு மானை முகத்தானைக்*
*காதலாற் கூப்புவர்தங் கை."*

## சைவம்.

"சைவம்" எனப் பெயரிய இத்தெய்வத் தமிழ்ப்பாவை சென்ற ஆனந்தவருடத் தனுர்மாதத்தில் அவதரித்தனள். இவளை யீன்ற சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் எனப்பெயரிய அணங்கும் விளம்பிவருடத் தனுர்மாதத்தி லவதரித்தனள். இப்போது இச்சேய் முதலாமாண்டு முற்றுப்பெற்று இரண்டாமாண்டு எய்தப்பெற்றனள். இவளைப் பயந்தவேந்திழைக்குப் பதினேழாண்டுகள் நிரம்பி, பதினெட்டாமாண்டு தொடக்கமுற்றது. இச்செந்தமிழ்ச்சேய் அவதரித்த ஞான்று, தங்கள் சுத்தாத்துவித சித்தாந்த சைவமரபை விளக்கவல்ல குலதீபமாகிய சற்புத்திரப்பேறின்றி, நீண்டகாலமாக நெடிதுவருந்திக்கிடந்த உண்மைச் சைவாபிமான சீலர்களாகிய இவளுறவினர் பலரும், இனி இவளால் வைதிக சைவமோங்கி வையகமுய்யுமென வெதிர்பார்த்து, இன்பக்கடலில் மூழ்கினார்கள். பொறாமை மனத்துப் போலிச்சைவர் சிலர், இவள் இளம்பிராயத்திலேயே பாலாரிஷ்டத் தாற் பரலோகமடைவாளென்று எதிர்பார்த்தார்கள். சிலர், இவள் ஒருவருக்கும் உறுபயனின்றி, பேருக்குப் பெண்ணெனத்திரிந்து, தேமாங்கு தங்கம்பாட்டு முதலிய சிற்றின்பப் பாட்டுகளைப்பாடி, அராபிக்கதை அவிசாரிக்கதை அல்லியரசாணிமாலை நல்லதங்காள்கதை முதலிய பயனற்றகதைகளைச் சொல்லிக் காலங்கழிப்பாள்போலும் என்று சந்தேகித்தார்கள். சிலர், இவள் புருடரைமயக்கிப் பொருள்

பறிக்கவந்த மாயக்கள்ளிபோலும் என்று, மனமருண்டார்கள். சிலர், இவள் சைவம் என்னுஞ் சிறப்புப் பெயர்தாங்கி அச்சுவாகனமேறி யவனிபை வலம்வரத்தோன்றியதனால், வைணவர் முதலிய வக்கம்பக்கத்தாரை மடிபிடித்திழுத்து மற்போர்செய்வாள்போலும் என்று ஐயுற்றார்கள். இவளுக்கு நாமகரணஞ் செய்யத்தொடங்கியபோது, தோழிமார்களுள் சிலர் இவளன்னையிடஞ் சென்று, " தோழீ, இக்காலத்தவர் பலர்க்குச் சைவம் என்னுஞ்சொல் செவியிற் புகுமாயின் அது ஈயத்தைபுருக்கி யூற்றுவதுபோலிருக்கிறது. ஆதலால் இப்பெயரை யிவளுக்கிட்டால் இவளை யொருவரும் விரும்பார். இவள் பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே, இவளுயர்குணங்களை நோக்காமல், சீ, இவளா, இவள் எப்போதும் ஒரேபட்சமாய்ப் பேசும் ஓர வஞ்சனைக்காரி. இவள் முகத்தைப் பார்க்கலாகாது. தன்னாயகனுக்குச் சமானமானவர்கள் எங்குமில்லை யென்பாள். தன் நாயகன் தலையோட்டிலிரப்பவனாயிருந்தும், பொன்மலையும் வெள்ளிமலையும் அவனுக்கே சொந்தம் என்பாள். குபேரனை அவன் கூட்டாளியென்பாள். எல்லாருக்கும் இரண்டுகண்ணென்றால் தன் கணவனுக்கு மூன்று கண் என்பாள். தன் மணாளனுக்கே தலையில் மதியுண்டென்றும் அம்மதி மற்றவரெவர்க்கும் இல்லையென்றுங் கூறுவாள். அவன் செய்யும் அழித்தற்றொழிலை அருள்விளையாட்டென்பாள். அவனுமவளும் ஒருகணமும் பிரியாது கூடிக்குலாவி யளவற்றபிள்ளைகளைப் பெற்றபடியேயிருந்தும் அவனை நித்தியப் பிரமசாரியென்பாள். வேடனைச் சிலையுண்டவனை வேள்விநாயகனென்பாள். பிள்ளைக்கறிதின்றவனைப் பேரருளாள னென்பாள். மாதர்பால் தூதுபோயவனை மாமறை யோதிய தூயவனென்பாள். இவ்வாறு தன் மகிழ்நனையே எப்போதும் உயர்த்தியுயர்த்திப் பேசுவாள். ஆதலால் இவள் எல்லாருக்கும் பொதுப்பெண்ணாயிருந்து யாவருங் காமுறப்பேசுகின்றவ ளல்லள் என்று எள்ளிஏசாநிற்பர். இவளுக்கு ஜகன்மோகினி, மதனசுந்தரி, ராஜாமணி முதலியபேர்களுள் ஒன்றையிட்டால், இவளெப்படியிருந்தாலும் இவள் பேரைக்கேட்டமாத்திரத்திலேயே இவளை யாவருங் காமுறுவர். இவளாற் பொருளும் ஈட்டலாம்" என்றார்கள். சில சேடிமார்கள் " நங்காய், இவள் நீ நெடுங்காலமாகப் பிள்ளைப்பேறின்றி பெருந்தவஞ்செய்து பெற்ற பெண்கொடியாகையால், இவள் இளமையிலேயே யிறந்துபோகாவண்ணம், இவளைக் குப்பையிலே புரட்டிக் குப்பம்மாளென்றழைக்க வேண்டும்" என்றார்கள். சிலர் இவளுக்கு முனியம்மாள் என்று பேரிட்டால் முனியன் காட்டேறி

முதலியவற்றால் தீங்குண்டாகாது" என்றார்கள். சிலர் "நாகூர் மீரா சாயப்பூக்குப் பிரார்த்தனைசெய்து பக்கிரியாயி என்று பேரிட்டால் பலமாய்வாழ்வாள்" என்றார்கள். இவ்வாறு தன் தோழிமார்கள் பலர் பல்வாறாகக் கூறியதைக்கேட்டு, சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் எனப்பெயரிய இவளன்னை குறுநகைசெய்து, அவர்களை நோக்கி, "நங்கைமீர், உங்களுக்கு எஞ்செல்வக்குழந்தையின் செம்மை நலமொன்றுந் தெரியவில்லை. இவள் கள்ளுண்டு சுள்ளுண்டு காமத்தீயாற் கலக்குண்டுகிடக்கும் அவிசாரிபெற்ற வரிவையன்று. பொறாமை மேலிட்டுப் பெருஞ்சண்டையிட்டு, புண்ணியக் குழாங்களைப் புறங் கூறிக் கலக்குஞ் சிற்றறிவினரீன்ற சிறுமியுமன்று. நான், வைதிக சைவமோங்கி வையகமுய்யவேண்டி,

நாடு நகரமு நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமா னென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே

என்று ஞானசிரியர் திருமூலநாயனார் உபதேசித்தருளிய திருமந்திரோபதேசத்தைக் கடைப்பிடித்து,

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்

என்னும் அம்மையார் அமுதவாக்கின்படி, பிறந்தநாள் தொடங்கி பதினாறுவருடங்களாக, மெய்வருத்தம் பாராமலும், பசிநோக்காமலும், கண்துஞ்சாமலும், கொடிறும் பேதையுங்கொண்டது விடாதெனும்படி, இடையறாமல், பலசிவதலயாத்திரைகள் செய்தும், தீர்த்தயாத்திரைகள் செய்தும், கிரிவலம் வந்தும், சென்றவிடங்களிலெல்லாம் அமிழ்தினுமினிய தமிழ்மறையோதியும், இறைவனாரின் இணையடிக்கமலங்களின் எண்ணுதற்கெட்டாவெழிலார் பெருமையை வாயாரச்சொல்லிப் பிரசங்கங்கள் செய்தும், சிவனடியார்களைச் சிவனெனவே பூசித்தும், சிவலிங்கார்ச்சனைகள் செய்தும், சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியெம்மானை நோக்கி யருந்தவம் புரிந்து, அத்தலைவனாரையணைந்து அருள்சூற்கொண்டுபெற்ற வருங் குலக்கொழுந்திவள். கற்புறு சிந்தைமாதர் கணவனை யன்றிவேறோர் இற்புறத்தவரைநாடார். எஞ்செல்வக்குழந்தையை யார் யாதுசொல்லினுஞ் சொல்லுக. நாய் குலைக்க நத்தம் பாழாகாது. ஆதலால், வேதத்தின் ஆன்மநாயகமாய் உயிர்க்குயிராய் அதின் இருதயத்தி

லிருந்து ஒளி வீசிக்கொண்டிருப்பதும், நினைத்தாலுஞ் சொன்னாலுங் கேட்டாலும் சர்வபாவங்களையுஞ் சாம்பராக்கிப் பேரின்பப் பெருவாழ்வையளிப்பதுமாகிய சிவநாமத்தையன்றி வேறொரு பெயரைக் கனவிலும் இவளுக்கிடேன். தெய்வத் தமிழ்மறையும் "சிவனெனு மோசையல்லதறையோ" என்றருளிச்செய்தது. திருமூலர் திருமந்திரமும்,

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்னத் தீவினை மாளும்
சிவசிவ வென்னத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே

என்று சிவநாமப் பெருமையை முழக்கியது. சகலவேதாகமங்களினுங் கூறப்படும் முப்பொருளிலக்கணமெல்லாம் இரண்டக்கரரூபமாகிய சிவநாமத்தில் அடங்கியிருக்கிறது. ஆதலால் சிவநாமத்தையுச்சரித்தவரே சகல வேதாகமங்களையும் ஓதினவராவர். சிவநாமத்தை யுச்சரித்தவரே சகல மந்திரங்களையும் உச்சரித்தவராவர். இதனைத் தமிழ்வேதம்

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே

என்றதனால் உணரலாகும். ஆதலால் சிவநாமத்தை யொத்துச் சிறந்த தொருநாமம் இருவகைப்பிரபஞ்சத்திலும், மூவுலகத்திலும், நால்வேதத்திலும், ஐம்பூதத்திலும், அறுவகைச்சமயத்திலும், எழுவகைத்தோற்றத்திலும், எட்டுத்திக்கிலுமில்லை." என்று கூறி இச் செந்தமிழ்ச்சேய்க்கு "சைவம்" என்று நாமகரணஞ் செய்தனள். இவ்வாறு தன் அன்னை நாமகரணஞ் செய்ததற்கேற்ப, இவ்விளஞ் சேய், முதலாமாண்டிலேயே, எந்நாட்டினுஞ் சிறந்த இத்தென்னாடெங்குந்தவழ்ந்து விளையாடி, எளியவரெவர்க்கும் எளியவளாகி, குழலினுமினிய மழலைமொழிகளால், சிந்தனைக்கெட்டாத்தந்தையின் சீரையும், பாசமகலாப்பல்லுயிர் திறத்தையும், அந்தமிலின்பத் தழியாவீட்டையும், புரையறு தொண்டர் வரையறு புகழையும், சித்தாந்தசைவரின் தற்கால நிலையையும், கற்றவர் சிலரன்றி மற்றவர் பலரும், உள்ளங்கையின் நெல்லியங்கனியென உணர உணர்த்தியுலவுவாளாயினள். இவள் இவ்வாறு உலகமுவப்ப உலாவிக்குலாவி விளையாடி வருதலைக்கண்ட சைவாபிமான சீலர்களாகிய செவிலித்

தாய்மார்கள் பலரும், இவள் பிறந்த போழ்தினும் பெரிதுவந்தனராய், இவளை இருகரங்களாலும் ஆசையோடெடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து, தாம் பெற்றவின்பம் பெறுக விவ்வையகம் என்று, இவளைப்பல்லோர்க்குங்காட்டி "இவளைப்பார்மின், பார்மின்; இம்மதலைமிழற்றுங்குதலை மொழிகளைக்கேண்மின், கேண்மின்; கேட்டுப் பிறவிப்பிணி தீர்மின், தீர்மின்; இப்பச்சிளங்குழவியின் உச்சிமுதல் உள்ளங்கால்வரையில் சைவமணங்கமழ்கின்றது; இவள் உருவிற்சிறியவளாயினும் மகிழமலர்போல் மணமரு திருக்கின்றனள்" என்று கூறி, பலர்கையிலுங்கொடுத்து யாவரும் இவள் வசப்பட்டின் புறுமாறு செய்து, நாளொருமேனி பொழுதொருவண்ணமாய் வளர்த்துவருவாராயினர். இவளைப்பெற்ற அன்னையும், இவளைப்போன் போடு வளர்த்துவருஞ் செவிலித்தாய் மார்களும் நாளுக்கு நாள் சீருந்திருவுமோங்கிப் பல்லாண்டு பல்லாண்டாய்ச்சிறந்து வாழவும், இந்நாகிளஞ்சேய் எக்காலும் வளர்பிறையெனவளர்ந்து நான் மறைச் சைவமோங்கி நானிலமுய்யவும், வேண்டுவார் வேண்டுவதேயீயும் விமலனார்க்கன்புபூண்டொழுகுஞ் சிவநேயச்செல்வர்களின் திருவடிக் கமலங்களைத்தியானித்து இரண்டா மலரை எழுதத்தொடங்கினோம்.

**திருப்பல்லாண்டு.**

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாளுமை கோனடி யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

---

## சமயம்.

**சிவஞான சித்தியார்.**

ஓது சமையங்கள் பொருளுணரு நூல்க
ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாது சமையம் பொருணூ லியாதிங்கென்னி
லிதுவாகு மதுவல்ல வெனும்பிணக்க தின்றி
நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண
நிற்பதியா தொருசமைய மதுசமையம் பொருணூ
லாதலினா லிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும்.

உலகத்தில் எண்ணிறந்த சமயங்களிருக்கின்றன. ஒவ்வொருவரும் தத்தஞ்சமயமே மெய்ச்சமயமெனவும் ஏனையவெல்லாம்

பொய்ச்சமயங்களெனவும் கூறுகின்றார்கள். இதனால், சிலர் கடவுளிருப்பது உண்மையானால் ஏன் இத்தனை சமயங்களிருக்கவேண்டும் என்று கடவுளின் இருப்பையே சந்தேகிக்கிறார்கள்.

சிலர் பிறதேசத்தவர்களெல்லாம் பெரும்பாலும் ஒவ்வொரு சமயத்தையே யநுட்டிப்பவர்களாயிருக்க, இத்தேசத்தினர் மாத்திரம் ஏன் பலவகைப்பட்ட சமயாநுட்டானங்களை யுடையவர்களாயிருத்தல்வேண்டும்; இவர்கள் இவ்வாறிருத்தலினால் இவர்களுக்குள் ஒற்றுமையுணர்ச்சியின்றி தேசாபிவிருத்தி குன்றிவிடுகிறது என்று சொல்லி, இத்தேசத்தாரனைவரையும் ஒரே சமயக்கொள்கையுடையவர்களாக்க முயற்சிசெய்கிறார்கள். இவர்களுக்குச் சைவம் வைணவம் என்னுஞ்சொற்களைக் கேட்பதற்கும் அருவருப்பாயிருக்கிறது. இம்மதங்களைப்பற்றியிவர்களிடம் யாரேனும் பேசத்தொடங்கினால், இவர்கள் "These are sectarian religions. We want only universal religion (இவைகள் மதபேதம்பாராட்டி ஒரு சார்பாய்ப் பேசுஞ்சமயங்கள். எங்களுக்கு எல்லோர்க்கும் பொதுவாகிய சமரச சமயமே வேண்டும்). Hinduism or Aryan religion is the only universal religion (இந்துமதம் அல்லது ஆரியமதமே எல்லாருக்கும் பொதுவாயிருக்குஞ் சமரச சமயமாம்) இதுவே வேதங்களிற் கூறப்பட்ட சமயம். இதுவே ஆதியில் நம்மவர்கள் அநுட்டித்த சமயம். மற்ற சமயங்களெல்லாம் இடையில் பார்ப்பார்களால் சீவனத்தின் பொருட்டு உண்டாக்கப்பட்டன" என்பார்கள். இவ்வாறு கூறுவோர்களை மேதாவிகளென மதித்தொழுகும் வெறும் ஆங்கிலங் கற்ற வகுப்பார் சிலர் இவர்கள் கூறுவதை நம்பி தங்கள் முன்னோர்கள் அநுட்டித்துவந்த மதாநுட்டானங்களை யலட்சியஞ் செய்கிறார்கள்.

சிலர், "பசுக்கள் பலவாயிருந்தாலும் பால் ஒன்றேயாயிருப்பது போலவும், ஆபரணங்கள் அளவற்றிருந்தாலும் பொன் ஒன்றேயாயிருப்பதுபோலவும், பாண்டங்கள் பலவகையாயிருந்தாலும் மண் ஒன்றேயாயிருப்பதுபோலவும், பல நதிகளும் போய் ஒரே கடலில் விழுவதுபோலவும், பலமதங்களும் ஒரே கடவுளைப்பிரதிபாதித்து, உயிர்களுக்கு ஒரே முத்தியின்பத்தையளிப்பனவாம். ஆதலால் சமயபேதம்பாராட்டுவது அறிவீனமாகும்" என்பார்கள். இவர்களுள் சிலர், சைவாசாரமும் வைணவாசாரமும் சிவசின்னங்களைமாத்திரம் தரித்துக்கொண்டு சிவனுக்கும் விஷ்ணுவுக்கும்பேதமில்லையென்று சொல்லி விஷ்ணுபத்திசெய்வார்கள். சிலர் சிவபத்தி செய்வார்கள். சிவகதாப்பிரசங்கஞ் செய்யும்போது சிவபரத்துவஞ்

சொல்லுமிடங்களிலும், அரிகதாப்பிரசங்கஞ் செய்யும்போது விஷ்ணு பரத்வங் கூறுமிடங்களிலும் வழவழவென்று பேசுவார்கள். இரு சமயத்தாரும் இன்புறுமாறு இடையிடையே "நமபார்வதீபதயே" என்றும் "கோவிந்தநாமசங்கீர்த்தனம்" என்றும் மாறிமாறிக் கூறுவார்கள். கடைசியில் "நானே யெங்குமாய் எல்லாமாயிருக்கும் பிரமப்பொருள். என்னைவிடவேறாய் இரண்டாவது பொருளில்லை. சிவனும் நானே, விஷ்ணுவும் நானே என்பார்கள். இன்னுஞ் சிலர், உருத்திரமூர்த்திக்கும் விஷ்ணுமூர்த்திக்கும் உள்ள சம்பந்தங்களைக் கூறும் சில கதைகளையும் செய்யுட்களையுஞ்சொல்லி "சிவனுக்கும் விஷ்ணுவுக்கும்பேதமேயில்லை, அரியுஞ்சிவனும் ஒண்ணு அல்லவென்பவன் வாயில் மண்ணு" என்று கூறி, சைவ விரதகாலங்களில் சிவசின்னங்களையும் வைணவ விரதகாலங்களில் வைணவ சின்னங்களையுந் தரித்துக்கொண்டு, இரண்டு விரதங்களையும் அநுட்டிப்பார்கள். சிவபரத்துவஞ் சொல்லும் தேவாரத்திருமுறைகளையும், விஷ்ணு பரத்வங்கூறும் நாலாயிரப் பிரபந்தத்தையும் வித்தியாசம் பாராட்டாமல் சமமாயெண்ணிப்பாடுவார்கள். இரண்டாலயங்களிலுஞ்சென்று வணங்குவார்கள். மற்றுஞ்சிலர் சைவ வைணவங்களை மாத்திரமன்றி, பிறசமயிகளை அஞ்ஞானிகள் என்று சொல்லும் கிறிஸ்து சமயம், சிவாலயங்களையும் விஷ்ணுவாலயங்களையும் இடித்து நாசப்படுத்திய மகமதிய சமயம், கடவுள் ஒருவர் உண்டு என்று ஒப்புக்கொள்ளாத நாத்திக சமயமாகிய புத்தசமயம் முதலிய எந்தச் சமயத்தையும் தங்கள் சொந்த சமயமெனக்கொண்டாடுகிறார்கள். இவர்கள் சிவாலய விஷ்ணுவாலயங்களைப்போலவே கிறிஸ்தவர்களின் மாதாகோயில்களிலும், மகமதியரின் மசூதிகளிலும், புத்தர் சமணர் முதலியவர்கள் கோவில்களிலும் பிரார்த்தனை செலுத்தி வணங்குகிறார்கள். இவர்களுக்குத் தங்கள்சமயம் பிறர்சமயம் என்னும் வேற்றுமையில்லை.

இவ்வாறு பலரும் பலவிதமாகக்கூறுவோரும் பலவிதமான அநுட்டானங்களை யுடையோருமாயிருத்தலினால், சமயம் என்பதற்குப்பொருள்யாது என்பதையும், உலகத்தில் ஏன் அளவற்ற சமயங்கள் உண்டாயின வென்பதையும், இவையாவும் தம்முள் சமத்துவமுடையனவா, அன்றி யேற்றத்தாழ்வுகளுடையனவா, அன்றி யொன்றோடொன்று முரணிக்கிடப்பனவா என்பதையும் விளக்கவேண்டி இவ்வியாசத்தை யெழுதத்தொடங்கி முதலில் ஏன் இத்தனை சமயங்கள் உண்டாயின வென்பதை விளக்குவாம்.

சமயம் எனினும் மதம் எனினும் ஒன்றே. மதம், கருத்து, கொள்கை, அபிப்பிராயம் என்பன ஒருபொருட்சொற்கள்.

இவ்வுலகத்தையும் இதிலுள்ள உயிர்களையும் பார்த்து மனிதர்கள் பலர் தங்கள் தங்கள் அறிவைக்கொண்டு, இவை எவ்வாறு தோன்றின?; இவை தாமே தோன்றினவா, வேறொருவரால் தோற்றுவிக்கப்பட்டனவா ?; வேறொருவரால் தோற்றுவிக்கப்பட்டனவாயின் இவைகளைத் தோற்றுவித்தவர்யாவர்?; அவர் ஒருவரா பலரா?; அவரிலக்கணங்களியாவை?; அவர் ஏன் இவைகளைத் தோற்றுவித்தார்?; இவை தாமே தோன்றியனவாயின், எதினின்றும் தோன்றின?; எவ்வாறு தோன்றின ?; இவை நித்தியப் பொருள்களா ? ; இடையில் தோன்றி யழிவனவா ?; என்பன வாதியாய கேள்விகளைக்கேட்டு ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டார்கள். இவ்வாராய்ச்சி தத்துவவாராய்ச்சியென்றும், ஞானவாராய்ச்சி யென்றுஞ் சொல்லப்படும். இவ்வாராய்ச்சி செய்யத் தலைப்பட்டவர்கள் தங்கள் தங்கள் அறிவுக்கெட்டியவாறு கடவுள், உயிர், உலகு என்னும் மூன்று பொருள்களைப்பற்றிப் பற்பல வபிப்பிராயங்களையுடையவரானார்கள். இவர்கள் கொண்ட அபிப்பிராயங்க ளொவ்வொன்றும் ஒவ்வொரு மதம் என்னப்படும். இவர்களுள் சிலர், " கடவுள் என்பதொரு பொருளும் ஆன்மாவென்பதொரு பொருளும் எக்காலத்திலும் இல்லை. நிலம் நீர் தீ காற்று என நான்கே தத்துவங்கள். இவற்றின் சேர்க்கையால் சரீரம் உண்டாகிறது. இச்சரீரத்திற்குக் காரணம் வினையென்பது பொய். உடம்பிற்கு இன்பத்துன்பங்கள் இயல்பாயுண்டாவன " என்றார்கள். இவர்கள் உலகம் ஒன்றையே ஒப்புக்கொள்பவராகையால் " உலோகாயதர் " என்னப்பட்டனர். கடவுளும் ஆன்மாவும் இல்லையென்பதனால் " நாத்திகர் " என்றுஞ் சொல்லப்படுவர். சிலர் " உலகத்தில் பிறந்துபிறந்துழன்று, சீலம் முதலியவற்றால் நல்லுணர்வுதோன்றி முழுதுணர்ந்து முத்திபெற்றுத் தன்னைப்போற் பிறருமுணர்ந்து உய்யும்பொருட்டுக் கருணையினால் பிடக நூல் செய்தவன் புத்தமதக்கடவுள். ஞானமே ஆன்மா. அது கணந்தோறும் தோன்றிநின்றழியும். முற்கணத்திற்றோன்றியழிந்த ஞானத்தில் தோன்றியவாசனை பிற்கணத்தில் தோன்றும் ஞானத்திற் பற்றுதலால் அறிவுமுதலாயின நிகழும். இந்த ஞானத்தில் தோன்றிய வாசனை யழிவதே முத்தி " என்றார்கள். இவ்வாறு கூறுபவர்கள் புத்தர் என்னப்பட்டனர். சிலர் " பொன் ஒன்றே பலவணிகளானாற்போல் பிரமப்பொருள் ஒன்றே உலகுயிர்களாகக் காணப்படுகிறது. சச்சிதா

னந்தமாய்நித்தமாய் வியாபகமாய் நிற்பது பிரமம். இது ஒன்றேமெய்ப் பொருள். ஏனையவெல்லாம், பிரமத்தின் விவர்த்தனமாய், இருட்டில் கிளிஞ்சில் வெள்ளியாகவும், கயிறு பாம்பாகவும் தோன்றுவதுபோல், அஞ்ஞானத்தால் பிரமத்தின் வேறாகிய பொருள்களாகக் காணப்படு கின்றன. எப்படி கிளிஞ்சிலில் கண்ட வெள்ளியும் கயிற்றிற்கண்டபாம் பும்பொய்ப்பொருள்களோ அப்படியே பிரமத்திற்கு வேறாகக்காணும் உலகும் உயிர்களும் பொய்ப்பொருள்களே. இத்தன்மையான பொய்ப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயிருப்பது மாயை, அது பிரமம் போல்சத்துமன்றி முயற்கொம்புபோல் அசத்துமன்றி சொல்லொ ணாததாயிருக்கும். இந்தமாயைக்கு வேறாகிய பிரமரூபமே யான் என வேதாந்த ஞானத்தால் அறிவதே முத்தி" என்றார்கள். இவர் கள் தங்களை வேதாந்திகள் என்பார்கள். சித்தாந்த ஞானநூல்கள் இவர்களை மாயாவாதிகள் என்றழைக்கின்றன. சிலர் கடவுளும் பிர பஞ்சமும் இருளும் ஒளியும்போல் இருவேறு பொருள்கள் என்றார் கள். சிலர் அவ்விரண்டும் சொல்லும் பொருளும்போல் பேதாபேதமா யிருக்கும் என்றார்கள். சிலர் அப்பரம்பொருள் அருவமாயிருக்கும் என்றார்கள். சிலர் உருவமாயிருக்கும் என்றார்கள். சிலர் அரு வுருவமாயிருக்கும் என்றார்கள்.

### தாயுமான சுவாமிகள் பாடல்.

பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர்
 பொறிபுல னடங்கு மிடமே
பொருளென்பர் சிலர்கரண முடிவென்பர் சிலர்குணம்
 போனவிட மென்பர் சிலபேர்
நாதவடி வென்பர்சிலர் விந்துமய மென்பர்சிலர்
 நட்ட நடுவே யிருந்த
நாமென்பர் சிலருருவ மாமென்பர் சிலர்கருதி
 நாடிலரு வென்பர் சிலபேர்
பேதமற வுயிர்கெட்ட நிலையமென் றிடுவர்சிலர்
 பேசினரு ளென்பர் சிலபேர்
பின்னுமுன் னுங்கெட்ட சூனியம தென்பர்சிலர்
 பிறவுமே மொழிவ ரிவையாற்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலாற்
 பரமசுக நிஷ்டை பெறுமோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
 பரிபூர ணாநந்தமே.

இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கூறுவாரா

ஞர்கள். இவைகளை விரிக்கிற் பெருகும். இதனால் உலகத்தில் பல சமயங்கள் உண்டாயின. அன்றியும், உலகத்தில் மனிதரியாவரும் ஒரே தன்மையாயில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாயிருக்கக் காண்கிறோம். இலட்சம்பேர் கூடிய ஓர் இடத்தில், வடிவம் நிறம் அறிவு ஆற்றல் முதலிய குணங்களெல்லாவற்றிலும் ஒத்திருக்கும் இரண்டு பேரைக் காண்பதரிது. மனிதர்கள் இவ்வாறு வேறுபட்டிருத்தற்கு அவர்கள் கன்மவேறுபாடுகளே காரணமாம். உயிர்களின் கன்மத்தினளவாக அவைகளுக்குத் தனுகரணபுவன போகங்கள் உண்டாகின்றன. ஆதலால், மனிதர்களின் கன்மவேறுபாடுகளுக்கேற்ப பலவகைப்பட்ட மதாநுட்டானங்கள் உண்டாயிருக்கின்றன. இந்நியதியை மாற்ற ஒருவராலும் ஆகாது. ஆனால், கிறிஸ்துவர் முதலாயினோர் பெரும்பாலும் ஒரேசமயத்தினராகவும், ஒவ்வொரு பெருங்கூட்டத்தினராகவும் இருக்க, இந்துக்கள் மாத்திரம் ஏன் பல சமயத்தினராகவும் பலபிரிவினராகவும் இருக்க வேண்டும் எனில், சொல்வாம். அறிவாளிகளிருக்குமிடத்தில் அபிப்பிராயபேதங்களுமிருக்கும். கல்விகேள்விகளில் வல்ல வமைச்சர்கள் கூடிய மந்திராலோசனை சபையில் யாதேனும் ஓர் அரிய விஷயத்தைப்பற்றி யாலோசிக்குங்கால், அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகத் தத்தம் அபிப்பிராயங்களைக் கூறுவார்கள். இவைகளுள் சில ஒன்றுக்கொன்று மாறாயிருக்கும். சில ஒத்திருக்கும். சில ஏற்றத்தாழ்வுகள் பெற்றிருக்கும். இவைகளெல்லாவற்றுள்ளும் ஒன்றே உசிதமாகவும் இருக்கும். இருந்தாலும், அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் புத்திக்கு உசிதமெனத் தோன்றியதையே நிலைநாட்டக் கடமைபட்டவர்களா யிருக்கிறார்கள். ஆதலால், அவர்களிடத்திற் காணப்படும் அபிப்பிராயபேதங்களால் அவர்களை உலகினர் இகழ்வதில்லை. கல்வியறிவற்றவர்கள் கூட்டத்தில் இவ்வித அபிப்பிராயபேதங்கள் உண்டாவதில்லை. இவர்கள் தங்கள் தலைவன் சொன்னவண்ணமே கேட்டு நடப்பார்கள். அதுபோல், தத்துவ வாராய்ச்சிசெய்யுமிடத்தில் பலமதங்கள் உண்டாகும். இந்துக்கள் ஆதியில் கல்வியில் சிறந்து தத்துவவாராய்ச்சி செய்யத்தொடங்கி பல மதங்கள் உண்டாயின. கிறிஸ்துவர் முதலாயினோர் அவ்வாறு தத்துவ வாராய்ச்சியின்றி, தங்கள் சமயத்தலைவர்கள் கூறியதை நம்பி, அந்த நம்பிக்கையிலேயே நிலைத்துவிட்டமையால் அவர்களுக்குள் அதிக பிரிவுகளின்றி ஒவ்வொரு பெருங்கூட்டத்தினரா யிருக்கிறார்கள். உதாரணமாக, கிறிஸ்துசமய நூலில் "கடவுள் உலகத்தைப்

படைத்தார். மண்ணையெடுத்து மனிதனைப்பண்ணினார். அவன் மூக்கில் ஊதி உயிரை உண்டாக்கினார். அவன் எலும்பையெடுத்துப் பெண்ணைச் செய்தார். அவர்களிருவரும் அவர் கட்டளையைமீறிப் பாவிகளானார்கள். அதனால் கடவுள் அவர்களுக்கு மரணம் என்னும் தண்டனை விதித்தார். அவர்களிருவரும் செய்த பாவத்தினால் அவர்களின் சந்ததியார்களாகிய மனிதர்களெல்லாம் மரண தண்டனையடைந்து வருகிறார்கள். ஏசுவை விசுவசித்து வழிபட்டவர்கள் கடவுளிருக்கும் பரமண்டலத்திலிருந்து வாழ்வார்கள். அவரை வழிபடாதவர்கள் அஞ்ஞானிகள் என்னப்படுவர். இவர்கள் அழியாநரகமெய்துவர். மறுஜனனம் என்பதில்லை" என்று கூறுவதை நம்பி கடவுளை விசுவாசித்து வருகிறார்கள். இத்தேசத்தினரோ வெனில், அவ்வாறு ஒருவர் சொன்னதை சொன்னபடியே நம்பினவர்களல்ல. இவர்கள் மனோவாக்குக் காயங்களுக்கெட்டாத கடவுளே கண்முன் வந்து சொன்னாலும் தங்கள் அறிவுக்கெட்டாதவைகளை ஏற்றுக் கொள்ள மாட்டாதவர்ளாயிருந்தார்கள். தருமியின் பொருட்டுச் சோமசுந்தரக்கடவுள் எழுதியனுப்பிய பாட்டிலுங் குற்றங்கூறிய நக்கீரமுனிவரே யிதற்குச் சான்று. சமணமதத்தினர் ஆதியில் இத்தேசத்தில் தோன்றியவர்கள். இவர்களுக்குத் திருஞானசம்பந்தப் பெருமானார் மிகஅரிய பலவற்புதங்களைச் செய்துகாட்டி உண்மைப் பொருள்களை யெடுத்து விளக்கியும், (வினைவசத்தால்) அவை தங்கள் அறிவுக்கெட்டாமையால் அவைகளை யொப்புக்கொள்ளாமல் கழுவிலேறினார்களேயன்றி உயிர்க்குப் பயந்தேனும் உடன்படவில்லை. இதனால் இத்தேசத்தார் கிறிஸ்தவர்கள் முதலிய சில சமயத்தினர்போல் வெறும் நம்பிக்கையளவாக நின்று விடாமல் தத்துவ வாராய்ச்சியிற் சிறந்திருந்தமையால், இத்தேசத்தில் பலமதங்களுண்டாயின வென்பது விளங்கும்.

(இன்னும் வரும்.)

## விண்ணப்பம்.

**சிவநேயச் செல்வர்காள்!**

நீங்கள் சைவசமயபரிபாலனமாகிய ஒப்பற்ற பதி புண்ணியஞ் செய்யவேண்டுவீரேல் இப்பத்திரிகை யெங்கும் பரவுமாறு செய்யுங்கள்.

## *கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் சரித்திரச்சுருக்கம்.

" போதமுறு சூதமுனி புகன்ற காந்தப்
புகழ்க்கடலிற் படிந்ததன்கட் பொருள தான
மேதகுவண் புனலருந்தி வைய முய்ய
வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மை தீரத்
தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டி லேறிச்
சலதியமு தினைநிகர்செந் தமிழ தான
காதன்மழை பொழிந்தவருட் கொண்ட லான
கச்சியப்ப னிருபாத முச்சி வைப்பாம்."

தொண்டைமண்டலத்திற் சிறந்து விளங்காநின்ற காஞ்சீபுரத்தின்கண்ணே, ஆதிசைவர் குலத்திலே, கல்வியறிவொழுக்கங்களினாலுஞ் சிவபத்தி சிவஞானங்களினாலுஞ் சிறப்புற்றோங்கிய காளத்தியப்பசிவாசாரியர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் காஞ்சீபுரத்துள்ள குமரகோட்டத்தருச்சகருள் ஒருவர். அவர் நெடுங்காலம் புத்திரனில்லாமையாற் பெருங்கவலை கொண்டு, புத்திரபாக்கியத்தின் பொருட்டுக் குமரகோட்டத்தின்கண் எழுந்தருளிய பெருங்கருணைக் கடலாகிய சுப்பிரமணியக்கடவுளை விதிப்படி சிரத்தையோடும் உபாசித்துக்கொண்டு வந்தார். வரும்பொழுது, அக்கடவுளது திருவருளினாலே, தமிழ்நாட்டார்கள் சுப்பிரமணியபக்தி பெற்றுய்யும்பொருட்டு அச்சிவாசாரியருக்கு அவருடைய கற்பினிற்சிறந்த பத்தினியாரது அருமைத் திருவயிற்றின் ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார்.

அப்புத்திரருக்குக் கச்சியப்பர் என நாமகரணஞ் செய்யப்பட்டது. அவர் ஐந்தாம்வயசிலே வித்தியாரம்பஞ்செய்யப்பெற்று, சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டுபாஷைகளையுங் கற்பாராயினார். அன்பு அருள் வாய்மை பொறை அடக்கம் முதலிய நற்குணங்களெல்லாம் அவரோடுடன் பிறந்து அவரோடுடன் வளர்ந்தன. அவர் ஏழாம் வயசிலே உபநயனஞ் செய்யப்பெற்று, வேதாத்தியயனஞ் செய்வாராயினார். சிலகாலத்துள்ளே சம்ஸ்கிருதத்தில் வேத வேதாங்கங்களையும் தமிழில் இலக்கணவிலக்கியங்களையும் கற்று வல்லராயினார்.

அவர் சிலகாலமாயபின் சமயதீக்ஷை பெற்று, தமிழ்வேதமாகிய தேவார திருவாசகங்களை ஓதுவாராயினார். அதன்பின் விசேஷதீக்ஷை பெற்றுச் சைவாகமங்களிற் கிரியாகாண்டங்களைக் கற்றறிந்துகொண்டார். அதன்பின் நிருவாணதீக்ஷையும் ஆசாரியாபிஷேகமும் பெற்று சைவாகமத்தின் ஞானகாண்டங்களை ஓதி அவற்றின் பொருளையும் தேவார திருவாசகங்களின் பொருளையுங்கேட்டு, அப்பொருள் வேதத்தின் ஞானகாண்டங்களாகிய உபநிடதங்களின் பொருளோடு

* இது தமது வாழ்நாளெல்லாம் சைவசமயாபிவிருத்தியின்பொருட்டே உழைத்த உண்மைச்சைவாபிமான சீலராகிய ஸ்ரீலஸ்ரீ, யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் வெளியிட்ட கந்தபுராணத்தின் முகவுரையிலிருந்து எடுத்து அச்சிடப்பட்டது.

அபேதமாயிருக்கக் கண்டு, அதனைச் சிந்தித்துத் தெளிந்து கொண்டார்.

இவ்வியல்புடையராய் விளக்கமுற்ற கச்சியப்பசிவாசாரியர் குமர கோட்டத்துச் சுப்பிரமணியக்கடவுளை மெய்யன்போடு பூசை செய்து கொண்டுவந்தார். ஒருநாட் சுப்பிரமணியக்கடவுள் கச்சியப்பசிவா சாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே, நீ கந்தபுரா ணத்தாறுசங்கிதைகளுட் சங்கரசங்கிதையின் முதற்கண்டமாகிய சிவரகசியகண்டத்திலுள்ள நமது சரித்திரத்தைக் கந்தபுராணம் எனப் பெயரிட்டுத் தமிழிலே பெருங்காப்பியமாகப் பாடக்கடவாய்" என்று ஆஞ்ஞாபித்து, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினர். உடனே கச்சி யப்பசிவாசாரியர் விழித்தெழுந்து, அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்சநெக்குருக, உரோமஞ்சிலிர்ப்ப, உரை தடுமாற, கரையற்ற இன்பக்கடலின் அழுந்தி, "ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங் கடையனாகிய தமியேனையும் ஒருபொருட்படுத்து வந்தருளிச்செய்த எம்பெருமானாகிய சுப்பிரமணியக்கடவுளது பெருங்கருணைத்திறம் இருந்தபடி என்னை என்னை" என்று ஆனந்தக்கூத்தாடினர்.

மற்றைத்தினத்திலே கச்சியப்பசிவாசாரியர் நித்தியகருமமுடித் துக்கொண்டு, சுப்பிரமணியபூசை செய்தபின், புராணம் பாட ஆரம் பித்தருளினர். நாடோறும் நூறுசெய்யுள்பாடி, அவை எழுதப்பட்ட ஏட்டையும், எழுத்தாணியையும், இராத்திரி காலபூசை முற்றியபின் குமரக்கோட்டத்தடிகளுடைய திருவடிக்கீழ் வைத்துவிட்டுத் திருக் கதவந் திருக்காப்பிட்டுக்கொண்டு தமது திருமாளிகைக்குப்போவார். பிற்றைநாட்காலையிலே நித்தியகருமமுடித்துக்கொண்டு, பூசையின் பொருட்டுத் திருக்கோயிலினுள்ளே புகுந்து, ஏட்டை எடுத்துப் பார்த்து, அதிற் சிலவிடங்களிலே திருத்தப்பட்டிருத்தல் கண்டு, அத னைச் சிரமேற்கொண்டு ஆனந்தபரவசராய்ச் சிறிது பொழுது நின்று பின் பூசைசெய்வார்.

இவ்வாறே கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணம் பாடி முடித்த பின், அதனைக் குமரகோட்டத்தில் அரங்கேற்றும்பொருட்டுச் சுப தினமுஞ் சுபமுகூர்த்தமும் நிச்சயித்துக்கொண்டு, எங்குமுள்ள சிவ னடியார்களெல்லாருக்கும் பத்திரம் விடுத்தருளினர். ஏவலாளர்கள் திருக்கோயிலையும் திருவீதிகளையும் மிக அலங்கரித்தார்கள். சுட்டப் பட்ட சுபதினத்திலே, திருநெறித்தமிழாகிய தேவார திருவாசகங் களில் வல்ல பெரியோர்களும், சிவாகமவிற்பன்னர்களும், வேத வேதாங்கபண்டிதர்களும், தமிழ்ப்புலவர்களும், இராசாக்களும், பிர புக்களும், பிறருமாகிய எல்லாரும் வந்து கூடினர்கள்.

கச்சியப்பசிவாசாரியர் குமரகோட்டத்தடிகளைப் பூசை செய்து அவர் சந்நிதானத்திலே மெழுகிப் பீடமிட்டு, அதின்மேற் பட்டை விரித்து, புஷ்பங்களைத் தூவித் தூபங்கொடுத்து ஆசனங்கற்பித்து, கந்தபுராணத் திருமுறையை அதன்மேல் வைத்து அருச்சித்து

வணங்கித் துதித்தார். பின்பு இருந்து கொண்டு, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்னும் முதற்செய்யுளை ஒருமுறை வாசித்து, "திகழ் தசக்கரச் செம்முகம் ஐந்து உளான்" என்றெடுத்து "விளங்காநின்ற பத்துத்திருக்கைகளும் செவ்விய ஐந்து திருமுகங்களுமுள்ள சிவபெருமானுடைய" என்று பொருளருளிச்செய்தார். உடனே அங்கிருந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர் "சுவாமிகாள், திகழ் தசம் திகடசம் எனப் புணர்தற்கு விதி தொல்காப்பிய முதலிய இலக்கணநூல்களுள் ஒன்றிலாயினும் இல்லையே" என்றார். அதற்குக் கச்சியப்பசிவாசாரியர் "தாங்கள் கூறியதொக்கும்; ஆயின் இம்முதலடி என்வாக்கன்று; சங்கப்புலவராகிய சுப்பிரமணியக்கடவுளது திருவாக்கு; அவரே எனக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளினர்" என்றார். அது கேட்ட அப்புலவர் புன்முறுவல் செய்து, "சுப்பிரமணியக்கடவுள் சுவாமிகளுக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளியது சத்தியமாயின் ஆகுக. ஆயினும், அது இரகசியம். அதனை நாங்கள் அங்கீகரிப்பதெங்ஙனம்! அக்கடவுள் சுவாமிகளுக்குத் தோன்றியதுபோல எங்களுக்குத் தோன்றி 'இவ்வடி நாமே எடுத்துக்கொடுத்தருளினோம்' என்று திருவாய்மலர்ந்தருளின் அங்கீகரிப்பேம்; அன்றேல், இதற்கு யாதானுமோரிலக்கணநூலில் விதி காட்டின் அங்கீகரிப்பேம்; அல்லாக்கால், அரங்கேற்றவொட்டேம்" என்றார். கச்சியப்பசிவாசாரியர் "இவ்விரண்டினுள் ஒன்று நாளைச் செயப்படும்" என்றருளிச்செய்து சபையாரைப் போக்கிவிட்டு, அற்றைத்தினத்திலே திருவமுது செய்யாது, இராத்திரிகாலபூசை முற்றியபின் திருக்கதவந் திருக்காப்பிட்டுக்கொண்டு சந்நிதியிலே தரையிலே சயனித்தருளினார். அப்பொழுது சுப்பிரமணியக்கடவுள் கச்சியப்பசிவாசாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே, சோழதேசத்தில் வீரசோழியம் என்று ஓரிலக்கணநூலிருக்கின்றது; திகழ்தசம் திகடசம் எனப் புணர்தற்கு விதி அந்நூலிற்சந்திபடலத்திற் பதினெட்டாஞ்செய்யுளிலிருக்கின்றது; சோழதேசத்துப் புலவனொருவன் அந்நூலை நாளைக்கு இவ்விடத்திற்கொண்டுவந்து அவ்விதியை எல்லாருக்குங்காட்டுவன்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார்.

மற்றைநாட்சபையாரெல்லாருங் கூடியிருந்தபொழுது, கச்சியப்ப சிவாசாரியர் தமக்கு முருகக்கடவுள் சொப்பனத்தில் அருளிச்செய்தமையை அவர்களுக்குச் சொல்லியருளினார். உடனே ஒரு புலவர் ஒருபுத்தகங் கையிற்கொண்டு அங்கே வந்தனர். அவரை அங்குள்ளோர்கள் நோக்கி, "நீர் யாவர்! உமது கையிற்புத்தகம் யாது?" என்று வினவினர்கள். அதற்கு அப்புலவர் "நாம் சோழதேசத்துள்ளேம்; இப்புத்தகம் வீரசோழியம்" என்றார். அப்பொழுது முன்னைநாளின் ஆக்ஷேபித்த புலவர் விரைந்து சென்று, அப்புத்தகத்தை வாங்கிச் சந்திப்படலத்திற் பதினெட்டாஞ்செய்யுளை வாசித்துத் திகடசக்கரம் என்னும் புணர்ச்சிக்கு விதி அதிலிருத்தலை

உணர்ந்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற்றனர். மற்றைத்தமிழ்ப்புலவர்களும் ஒருவர் பின் ஒருவராக அதனை வாங்கிப் பார்த்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற்றார்கள். இறுதியிலே சோழதேசத்துப் புலவர் அப்புத்தகத்தைக் கச்சியப்பசிவாசாரியர் கையிற் கொடுத்து, சபையாரெல்லாரையும் நோக்கி, "ஆக்ஷேபம் ஒழிந்ததா ஒழிந்ததா!" என்று சொல்லிவிட்டு மறைந்தருளினார். உடனே கச்சியப்பசிவாசாரியர் தமையாண்டருளிய அறுமுகக்கடவுளது பெருங்கருணைத் திறத்தை நினைந்து நினைந்து, சரீரம் விதிர்ப்புற, மயிர்க்காறுறும் திவலை உண்டாக, என்பெல்லாம் நெக்கு நெக்குருக, மதகிடைப் புறப்படுஞ்சலம்போல ஆனந்தபாஷ்பம் பொழியப் பரானந்தபரவசரா எழுந்தருளியிருந்தார். அப்பொழுது சபையார் எல்லாரும் "இங்ஙனம் எழுந்தருளிவந்த புலவர் குமாரக்கடவுளே" என்று துணிந்து ஆச்சரியமடைந்து, வெயிலிடைப்பட்ட வெண்ணெய்போல மனங் கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்பக் குறுவேர்வை கொள்ள ஆனந்த வருவி சொரிய ஆனந்தக்கூத்தாடிக் கச்சியப்பசிவாசாரியருடைய பெருமையை நன்குணர்ந்து, அவர் திருவடிகளில் அடியற்ற மரம் போல் விழுந்து நமஸ்கரித்து, அவரைத் தோத்திரஞ்செய்தார்கள். ஆக்ஷேபஞ்செய்த புலவர் கச்சியப்பசிவாசாரியரைப் பலதரமும் நமஸ்கரித்து, "எம்பெருமானே, புழுத்த நாயினுங்கடையேனாகிய தமியேன் சுவாமிகளுடைய மகிமையைச் சிறிதும் அறியாது ஆக்ஷேபித்த பெருங்குற்றத்தைப் பொறுத்து அடியேன்மீது திருவருள் சுரந்தருளுக" என்று அதி விநயத்தோடு பிரார்த்தித்து, மீட்டும் அடியற்ற மரம்போல் வீழ்ந்து கிடந்தார். கச்சியப்பசிவாசாரியர் எழுந்து அப்புலவருடைய இரண்டு கைகளையும் தம்முடைய அருமைத்திருக்கைகளினாலே பற்றியெடுத்து இறுகத்தழுவி, "ஐயரே, தங்கள் ஆக்ஷேபத்தினாலன்றோ இச்சபையாரெல்லாருக்கும் திருவருளினுண்மை வெளிப்பட்டது இதன்பொருட்டுத் தங்களுக்குச் செயற்பாலதாகிய கைம்மாறு யாது! அறியேம் அறியேம்" என்று பாராட்டியருளினார்.

அதன்பின் சபையாரெல்லாரும் நமஸ்கரித்து "சுவாமிகாள், இனிப்புராணத்தைத் தடையின்றி அரங்கேற்ற ஆரம்பித்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அங்ஙனமே கச்சியப்பசிவாசாரியர் அரங்கேற்றுவாராயினார். காஞ்சித்திருநகரத்துள் ஆதிசைவர்கள் முதலானவர்களுக்கும் கந்தபுராணங்கேட்க வந்த எண்ணிறந்த அடியார்களுக்கும் போசனமுதலியவைகளெல்லாம் தொண்டைநாட்டுள்ள இருபத்துநான்குகோட்டத்து வேளாளப்பிரபுக்களுடைய செலவினாலே நடந்தன. எல்லாரும் நியமமாக வந்து பேராசையோடு கேட்கக் கச்சியப்பசிவாசாரியர் தினந்தோறும் புராணம் வாசித்துப் பொருள் சொல்லி ஒருவருஷத்திலே முடித்தருளினார்.

புராணமுற்றுப்பெற்றவுடனே கச்சியப்பசிவாசாரியர் புராணத் திருமுறையை விதிப்படி அருச்சனை செய்து நமஸ்கரித்தார். அப்

பொழுது அங்குள்ள எத்திறத்தார்களும் அன்பினோடு விம்மி விம்மித்தண்டாகாரமாக விழுந்து, கச்சியப்பசிவாசாரியரை நமஸ்கரித்தெழுந்து இரண்டு கைகளுஞ் சிரசின்மேலேறிக் குவிய நின்று, துதித்தார்கள். கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணத்திருமுறையோடுந் தந்தச்சிவிகையில் எழுந்தருளி, இருபத்துநான்குகோட்டத்துமுள்ள வேளாளப்பிரபுக்களுள்ளே சிலர் சிவிகை தாங்க, சிலர் வெண்சாமரம் வீச, சிலர் குடை கொடி பிடிக்க, நானாவித மங்கலவாத்திய வொலியினாலே திக்குகளெல்லாஞ்செவிடுபட, பிராமணர்கள் வேதகோஷஞ்செய்ய, சிவனடியார்கள் சரவணபவ சரவணபவ என்று சொல்லும் பேரொலி தழைக்க, திருநகரவாசிகள் திருவீதிகடோறுஞ்சுத்திசெய்து வாழைகள் நாட்டித் தோரணங்கள் நிரைத்துப் பூமாலைகள் தூக்கிப் பூரணகும்பங்கள் வைத்துப் பொரி தூவித் திருவிளக்கேற்றி அறுகெடுக்க, தமது அருமைத் திருமேனியிலே தரிக்கப்பட்ட திரிபுண்டரத்தின் அழகையும், உருத்திராக்ஷமாலைகளின் அழகையும், சின்முத்திரையையும் திருக்கண்களினின்று பொழியும் பரமானந்தவாரியையும், அடியார்கள் கண்டு மனநெக்கு நெக்குருக வணங்கித் துதித்து ஆனந்தக்கூத்தாட, திருவீதிவலஞ்செய்து, குமரகோட்டச்சந்நிதியை அடைந்து, சிவிகையினின்றும் இறங்கித் திருமுறையைத் திருக்கோயிலினுள்ளே கொண்டுபோய்த் திருமுன்னே வைத்தருளினார். உடனே எல்லோரும் கச்சியப்பசிவாசாரியரை, அவர் "அமையும் அமையும்" என்றவழியும் தவிராது, ஆராமையினாலே பலகாலும் நமஸ்கரித்து, "பரமகருணாநிதியாகிய எம்பெருமான் தமிழ்நாட்டாரெல்லாரும் பிழைக்கும்பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளிய இப்புராணமாகிய திவ்வியாமிர்தத்தை அடியேங்கள் எஞ்செவிவாய் மடுத்து உய்ந்தனம் உய்ந்தனம்" என்று விண்ணப்பஞ்செய்து இன்பமுற்றார்கள்.

தமிழ்நாடெங்குமுள்ள சிவனடியார்களெல்லாரும், இக்கந்தபுராணததை மிகப்பாராட்டி, சிரத்தையோடு எழுதுவோரும், வாசிப்போரும், பொருள் சொல்வோரும், கேட்போருமாய், இதன் சொற்சுவை பொருட்சுவைகளை அநுபவித்துப் பேரானந்தப்பெருஞ்செல்வம் அடைந்தார்கள்.

பெருங்கருணைப் பிழம்பாகிய கச்சியப்பசிவாசாரியர் பின்னருஞ் சிலகாலம் குமரகோட்டத்தடிகளைப் பூசை பண்ணிக்கொண்டும் ஞானநிட்டை செய்துகொண்டும் இருந்து, அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப்பிழம்பாய் நின்ற சிவத்தோடும் இரண்டறக் கலந்தனர்.

இக்கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள், நோய்நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாந்தாம் வேண்டியவாறே பெறுவர்கள். இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினால் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இது சத்தியம் சத்தியம், முக்காலுஞ் சத்தியம்.